# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் திங்கள்கிழமை 12ம் நாள் சாட்சியாகிய கோபி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபி | வயது | 38 |
| த/பெ. | பெருமாள் | இனம் | ஆண் |
| கிராமம் | முதூர் | தொழில் | ஆட்டோ ஓட்டுநர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).

**<u>முதல் விசாரணை 12.05.2025 அ.சா.2</u>**

1. நான் முதூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 வினாயகம் எனது மச்சான். ஒரு வருடத்திற்கு முன்பு அ.சா.1 வினாயகத்திற்கும் அவரது சித்தப்பா மகன் ராயனுக்கும் கீழ்வானம் கிராமத்தில் பிரச்சனை நடந்தது. அ.சா.1 வினாயகத்துக்கு தலையில் காயம் ஏற்பட்டு தையல் போட்டார்கள். நான் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அ.சா.1 வினாயகம் கத்தியால் ராயனு, அவரை வெட்டியதாக சொன்னார். ராயனுவின் பெயர் அரிநாதன் என்று அழைப்பார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள மஞ்சள் நிற டீ சர்ட் அணிந்த நபர்தான் ராயனு என்கிற அரிநாதன். (சாட்சி, 1வது எதிரியை சரியாக நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்). போலீசார் என்னை விசாரித்தனர்.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>**

2. போலீஸ் விசாரணையில் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தாக தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிகள் எனது உறவினர்கள் என்றால்

சரிதான். நான் எனது உறவினர்களுக்காக சம்பவத்தை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.